https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)
ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19-3 July 2025
Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# அல்லாந்து – இன்பமா? துன்பமா? (குறிஞ்சிப்பாட்டு உரைகளை முன்வைத்து)

**முனைவர் வே. கார்த்திக்**
தொகுப்பாளர்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
நகர் நிருவாக அலுவலக வளாகம் முதல் தளம், # 75 சாந்தோம்
நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி.நகர், சென்னை - 600028

'பெருங்குறிஞ்சி' என வழங்கப்படும் குறிஞ்சிப்பாட்டின் 143ஆவது அடியாகிய, "சொல்லேம் ஆதலின் அல்லாந்து கலங்கி" என்பதிலுள்ள 'அல்லாந்து' என்ற சொல்லுக்கு நச்சினார்க்கினியர் 'மகிழ்ந்து' என்று பொருள் சொல்ல, பொ.வே.சோமசுந்தரனார் 'வருந்தி' எனப் பொருளுரைத்துள்ளார். தமிழண்ணல், ச.வே.சுப்பிரமணியன் ஆகியோர் பெருமழைப் புலவர் பொ.வே.சோ.வின் கருத்துக்கு உடன்பட, உ.வே.சாமிநாதையரும் செகந்நாதாசாரியாரும் நச்சினார்க்கினியர் உரையைப் பின்பற்றியுள்ளனர். இவ்விரு பொருள்களில் எது ஏற்புடையது? என்று விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

'அல்லாந்து' – இன்பமா? துன்பமா? என்ற வினாவிற்கு விடைகாண்பதற்கு முன் 'அல்லாந்து' என்ற சொல் சங்க இலக்கியம் உள்ளிட்ட பிற இலக்கியங்களில் எவ்வெவ்விடங்களில் வந்துள்ளது. அதற்கு உரையாசிரியர்கள் என்ன பொருளுரைத்துள்ளனர்? என்றறிவது தேவையாகிறது.

**'அல்லாந்து' - வருமிடமும் வார்த்த பொருளும்**

சங்க இலக்கிய நூலாகிய எட்டுத்தொகையில்,

**அதனெதிர் சொல்லா ளாகி அல்லாந்து** (நற். பா.55:8)
**நில்லாது நீங்கி நிலஞ்சேோர அல்லாந்து** (பரி. பா.12:71)
**சொல்ல வல்லிற்றும் இலனே; அல்லாந்து** (அகம். பா. 32:15)
**வல்ஆண் அருமுனை நீந்தி, அல்லாந்து** (அகம். பா. 107:12)

எனவரும் தொடர்களில் 'அல்லாந்து' என்ற சொல் இடம்பெற்றுள்ளது. அதற்குப் பரிமேலழகர், பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர், ந.மு.வேங்கடசாமி நாட்டார், பொ.வே.சோ., கரந்தைக் கவியரசு, ஆர். வேங்கடாசலம் பிள்ளை, தமிழண்ணல், நா.இராமையாபிள்ளை ஆகியோர், 'மயங்கி', 'கலங்கி', 'வருந்தி', 'துன்புற்று', 'வருத்தமுற்று', 'அலமந்து' என்றே பொருளுரைத்துள்ளனர். குறிஞ்சிப்பாட்டில் 'அல்லாந்து' என்பதற்கு 'மகிழ்ந்து' எனப் பொருள்கூறியுள்ள நச்சினார்க்கினியரும்கூட,

**அல்லாந்து அவள்நடுங்க அன்பின் அகல்வாயோ** (சீவக. முத்தியிலம். 2963:4)

**அல்லாந்து அகன்கோயில் ஆழ்கடல்
போலாயிற்றே** (சீவக.முத்தியிலம். 2964:4)

என்னும் சிந்தாமணி பாடலடிகளில் இடம் பெற்றுள்ள **'அல்லாந்து'** என்ற சொல்லுக்கு **'அலமந்து'** என்றே உரைகூறியுள்ளார். இதைப்போன்றே,

**தொல்தொழில் வரைத்தன்றி வயவுநோய்
நலிதலின்**

**அல்லாந்தார்**….. . . . (கலி. பா.29:1,2)

என்ற பாலைக்கலிப் பாடலின் விளக்கத்தில், **'அல்லாந்தார்'** என்ற சொல்லுக்கு **'அலமந்த சுற்றத்தார்'** என்று பொருள்கூறியுள்ளார் நச்சினார்க்கினியர். ஆகவே **'அலமந்து'** என்பதற்கான விளக்கத் தைப் பார்க்கும் போது, மதுரைத் தமிழ்ப் பேரகராதி, **'அலமரு'** வென்னும் பகுதியினின்று பிறந்த ஒரு வினையெச்சம் என்று பொருள் தருகிறது. இதன்மூலம் இச்சொல் **'அலமரல்'** என்னும் சொல்லோடு தொடர்புடையது என்பது புலனாகிறது. எனவே, **'அல்லாந்து'** என்பதற்கான பொருள் விளக்கங்களைப் புரிவதற்கு **'அலமந்து', 'அலமரல்'** ஆகிய வற்றிற்கான அகராதிப் பொருள்களையும் அறிய வேண்டியுள்ளது.

**அகராதி விளக்கங்கள்**

மதுரைத் தமிழ்ப் பேரகராதி 'அலமந்த' என்பதற்குத், "தெரிநிலை வினைப் பெயரெச்சம்" எனப் பொருளுரைத்துள்ளது. கழகத் தமிழ் அகராதி, மதுரைத் தமிழப் பேரகராதி, வீரமாமுனிவர் இயற்றிய சதுரகராதி, கழகத் தமிழ்க் கையகராதி, தமிழ் இலெக்சிகன் ஆகியவை **அலமரல்** (அல்லது) **அலமருதல்** என்பதற்குச் **சுழலல், மனச்சுழற்சி, தடுமாறல், வருந்துதல், அசைதல், அஞ்சுதல், கலங்குதல், இளைத்தல், துக்கம், துன்பமுறுதல்** ஆகிய பொருள் களைச் சுட்டுகின்றன.

தமிழ் இலெக்சிகன் **'வருந்துதல்'** என்னும் பொருளுக்குச் சான்றாக, **"கொம்பரில் லாக்கொடி போல மைந்தனன்** (திருவாசகம் 6:20)" என்ற மாணிக்கவாசகர் வரியையும், 'அசைதல்' என்ற பொருளுக்கு ஆதாரமாக, **"ஆலைக் கலமரு தீங்கழைக் கரும்பே** (மலைபடு.119)" என்ற மலைபடுகடாம் அடியையும் தந்துள்ளது.

மேற்குறித்த அகராதிகளில் கழகத் தமிழ்க் கையகராதி, தமிழ் இலெக்சிகன் ஆகியன மட்டுமே 'அல்லாத்தல்' என்பதற்குத் 'துன்ப முறுதல்' என்ற பொருளோடு 'மகிழ்தல்' என்ற பொருளையும் எடுத்துரைக்கின்றன. அவற்றுள்ளும் தமிழ் இலெக்சிகன், 'துன்ப முறல்' என்ற பொருளுக்குச் சான்றாய்,

**வயவுநோய் நலிதலி னல்லாந்தார்** (கலி.29)

என்ற பாலைக்கலியின் பாடலடியையும், 'மகிழ்தல்' என்ற பொருளுக்கு உதாரணமாக,

**அதனெதிர் சொல்லே மாதலி னல்லாந்து
கலங்கி** (குறிஞ்சிப். 143)

என்ற குறிஞ்சிப்பாட்டின் அடியையும் தந்துள்ளது.

இங்கு 'மகிழ்தல்' என்னும் பொருளுக்கான இலக்கியச் சான்றானது நச்சினார்க்கியரின் குறிஞ்சிப்பாட்டு உரையை அடிப்படை யாகக் கொண்டு அமைந்துள்ளது என்பதும், அதனைத் தவிர்த்துப் பிற சான்றுகள் 'மகிழ்தல்' என்னும் பொருளுக்கான ஆதார மாகச் சுட்டப்படவில்லை என்பதும் எண்ணத்தக்கது.

இனி, 'அல்லாந்து' என்பதன் பொருள் விளக்கத்தைப் புரிவதற்கு 'அலமந்து", 'அலமரல்' என்னும் சொற்கள் சங்க இலக்கியத்தில் பயின்றுவரும் இடங்களை யும், அவற்றிற்கான பொருள்களையும் தெளிய வேண்டியுள்ளது.

**சங்க இலக்கியத்தில் அலமந்து, அலமரல் - இடமும் பொருளும்**

'எண்பெருந்தொகை' எனப்படும் எட்டுத் தொகை நூல்களான கலித்தொகை மற்றும் புறநானூறு ஆகியவற்றில் முறையே,

**அகலாங்கண் அளைமாறி அலமந்து
பெயருங்கால்** (கலி. பா.108:5)

**வலமுறை வருதலும் உண்டென்று அலமந்து**
(புறம். பா.31:15)

எனவரும் அடிகளில் 'அலமந்து' என்ற சொல் இடம்பெற்றுள்ளது. அவற்றுள் கலியில் நச்சினார்க்கினியரால் 'திரிதல்' என்னும் பொருளிலும், புறத்தில் ஔவை. துரைசாமிப் பிள்ளையால் 'சுழன்று' என்ற பொருளிலும் அச்சொல் ஆளப்பட்டிருப் பதைக் காண முடிகிறது.

இனி, 'அலமரல்' என்னும் சொல் வருமிடங்கள் எனப் பார்க்குமிடத்து,

**உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்**
(முல்லைப். அடி.13)

**அலமரல் ஆயிடை வெரூஉதல் அஞ்சி**
(குறிஞ்சிப். அடி.137)

**அலமரல் வருத்தம் தீர, யாடிநின்**
(நற். பா.9:3)

**அலமரல் அசைவளி அலைப்ப என்**
(குறுந். பா.28:4)

**அலமரல் ஆயமொடு அமர்துணை தழீஇ**
(ஐங். பா.64:1)

**துஞ்சாது அலமரல் நாம் எதிர்ந்தனமே**
(ஐங். பா.448:6)

**நின்னுள்நோய் நீயுரைத்து அலமரல்**
**எல்லாம் நாம்** (பாலைக். பா.34:21)

**அலமரல் உண்கண்ணார் ஆய்கோதை**
**குழைத்தநின்** (பாலைக். பா.73:12)

**அலமரல் அமருண்கண் அந்நல்லாய் நீயுறீஇ**
(பாலைக். பா.113:2)

**அலமரல் நோயுள் உழக்குமென் தோழி**
(பாலைக். பா. 126:20)

**அலமரல் ஆயமொடு யாங்கணும் படாஅல்**
(அகம். பா.7:3)

**அலமரல் மழைக்கண் அமர்ந்து நோக்காள்**
(அகம். பா. 190:5)

**அலமரல் மழைக்கண் மல்குபனி வார, நின்**
(அகம். பா. 233:1)

**அலமரல் மழைக்கண் தெண்பனி மல்க**
(அகம். பா.398:8)

**நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத்**
(புறம். பா. 43:1)

**அலமரல் யானை உரும்என முழங்கவும்**
(புறம். பா. 44:5)

ஆகிய சொற்றொடர்களில் 'அலமரல்' என்னும் சொல் இடம்பெற்றுள்ளதை அறிய முடிகிறது. மேற்குறித்த இடங்களில் வரும் 'அலமரல்' என்னும் சொல்லுக்கு நச்சினார்க்கினியர் உட்பட, உ.வே.சாமிநாதையர், பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர், ரா.இராகவையங்கார், மறைமலையடிகள், வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியார், பெரு மழைப் புலவர் பொ.வே.சோ., ந.மு.வேங்கட சாமி நாட்டார், கரந்தைக் கவியரசு, ஆர்.வேங்கடாசலம், தமிழண்ணல், ச.வே.சுப்பிரமணியன், நா. இராமையா பிள்ளை உள்ளிட்ட அனைவரும் 'சுழல்தல்', 'மனச்சுழற்சி', 'திரிதல்', 'கலங்குதல்', 'துன்பம்' ஆகிய பொருள்களையே கூறியுள்ளனர் என்பது குறிக்கத்தக்கது.

### அல்லாந்து - பொருள் வேறுபாடும் தீர்வுகளும்

இனி, குறிஞ்சிப்பாட்டின் விளக்கவுரைக்கு வருவோம்.

**. . . . .. அதனெதிர்**
**சொல்லேம் ஆதலின் அல்லாந்து கலங்கி**
(குறிஞ்சிப்.அடி.142-143)

என்ற அடிகளுக்கான விளக்கப் பகுதியில், பெருமழைப்புலவர் "அல்லாத்தல் என்னும் சொல் ஒன்றனை எதிர்பார்த்தவழி அது எய்தப் பெறாது ஏமாற்றம் அடைந்து வருந்தும் வருத்தத்தைக் குறிக்கும்" எனக் கூறியதோடு, 'அல்லாந்து' என்ற சொல்லைத் தலைவனுக்கேற்றி, "அவன் கூற்றிற்கு மாற்றாக யாங்கள் யாதொன்றும் கூறாமை யான் அவன் ஏமாற்றத்தானே வருந்தி" எனப் பொருளுரைத்துள்ளார். இக்கருத்துக்கு வலுசேர்க்கும் வகையில்,

**'தையலாய், சொல்லியவாறெல்லாம்**
**மாறுமாறு யான் பெயர்ப்ப**
**அல்லாந்தான் போலப்**
**பெயர்ந்தான்'** (கலி. (111)

**'எல்லாரும் காண இலக்கணையோடாடி**
**னாய் அல்லாந்து அவள் நடுங்க**
**அன்பினகல்வாயோ'** (சீவக. (299, 3:1)

ஆகிய மேற்கோள்களை எடுத்தாண்டுள்ளார். பாட்டில் உள்ளபடியே சொற்றொடாரை எடுத்துக்கொண்டு ஆற்றொழுக்காகப் பொருள் சொல்லும் பொ.வே.சோ. 'அல்லாந்து' என்னும் சொல்லைத் தலைவனுக்கு ஏற்றி உரையியற்றியுள்ளார். ஆனால் நச்சினார்க்கினியரோ 'மாட்டு' இலக்கணத்தின் அடிப்படையில், "அலமந்து அதன் எதிர் சொல்லேம் ஆதலின் கலங்கி" எனச் சொற்றொடரை மாற்றி இணைத்து, "அவன் கூற்றிற்கு யாங்கள் மகிழ்ந்து அதற்கு மறுமொழி கொடேமாகை யினாலே

நெஞ்சழிந்து” என மகளிர்க்கேற்றிப் பொருள் கூறியுள்ளார்.

நச்சினார்க்கினியரின் பத்துப்பாட்டு உரையை ஆய்ந்து ஆராய்ச்சிக் குறிப்புரை எழுதிய உ.வே.சாமிநாதையரும் நச்சினார்க்கினியரின் கருத்தில் மாறுபடவில்லை என்பது குறிக்கத் தக்கது. சி.செகந்நாதாசாரியாரோ, ‘அல்லாந்து’ என்பதற்கு மகிழ்ந்து என்று பொருள்கொண்டு நச்சினார்க்கினியர் அதனை மகளிர்க்கேற்றி உரைகண்டனர்; அவ்வுரை சிறப்புடைத்தாகலின் யாமும் அவ்வழி கூறினோம்” என்றே பதிவு செய்துள்ளார்.

மேலும், மகளிர் பதில் சொல்லாததற்குக் காரணம்காட்டவே நச்சினார்க்கினியர் இவ்வாறு உரையியற்றியதாகக் கூறும் செகந்நாதாசாரியார், “யாம் எதிர் சொல்லே மாதலின் தலைவன் ஏமாற்றமடைந்தான் என்பதினும், அவன் கூற்றிற்கு யாம் பெரிதும் மகிழ்ந்ததனால் அம்மகிழ்வில் எதிர்கொடே மாயினேம் என்பது சீரிய வுரையன்றோ!” எனக்கூறிப் பெருமழைப் புலவரைப் பெயர் சுட்டாது மறுக்கிறார்.

ஆனால், சுற்றிவளைத்த வேட்டைநாய்கள் மீதிருந்த அச்சமே தலைவியும் தோழியும் மறுமொழி கூறாததற்குக் காரணம் என்பது குறிஞ்சிப்பாட்டின் நிகழ்வுச் சூழலைக் கருத்தில் கொள்வார்க்குப் புலனாகும்.

மேலும், செகந்நாதாசாரியார், ‘இனி ஓடிப்போ’ என்ற வள்ளி மொழிகேட்டு, நீடு மகிழ்வெய்தி நின்றான் குமரேசன் என்பது கந்தபுராணம். ஆங்குத் தலைவி மொழி கேட்டு ‘நம்பால் அன்புடைமை தோற்று வதன்றோ இப்பேச்சு’ எனத் தலைவன் மகிழ்ந்தான்; ஈங்குத் தலைவன் மொழி கேட்டுத் தலைவி, தோழி மகிழ்ந்தனர். ‘மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனமென்ப தொன்றேயன்றோ” எனவும் கூறித் தம் கருத்தை நிலைநாட்ட முயற்சிக்கிறார்.

இவ்விடத்தில் குறிஞ்சிப்பாட்டின் சூழலையும் பின்னணியையும் மனங்கொள்வோருக்குச் செகந்நாதாசாரியாரின் விளக்கத்தில் நெருடல் இருப்பது புலனாகும். எப்படி யெனின், தலைவியின் களவைக் கற்பாக்கும் எண்ணத்துடன் செவிலியிடம் அறத்தொடு நிற்கும் தோழி, முன்பின் அறியாத ஆடவன் ஒருவன் எங்களைப் பாராட்டிப் பேச, அதனால் மகிழ்ந்த நாங்கள் அவனுக்குப் பதில் சொல்லவில்லை என்று கூறுவதை விட, நலம் பாராட்டியபோதும் முன்பின் அறியாத ஆண்மகனின் கேள்விக்கு நாங்கள் மறுமொழி கூறவில்லை. அதனால் வருந்திய அவன் மீண்டும் எங்களிடம் பேசினான் எனக் கூறுவதன் மூலம் தலைவனின் எளிமையை உணர்த்தினாள் என்பதே பொருத்தமுடைய தாக இருக்கும்.

மேலும், தலைவனைக் கண்டவுடன் அவனது பாராட்டுரைக்குத் தலைவி மயங்கி மகிழ்ந்தாள் என்பதைக்காட்டிலும், தலைவி யின் இன்னுயிரைக் காத்த தலைவன்பால் அவள் காதலுற்றாள் எனக் கூறுவதன்மூலம், தலைவியின் நற்பண்பைச் சிறப்பிப்பதோடு தாய்தந்தையரிடம் இரக்கம் கலந்த நல்லெண்ணத்தை எழச்செய்யலாம் என்பதே அறத்தொடு நிற்கும் தோழியின் எண்ணமாக இருக்கமுடியும்.

**எதிர்மறை இலக்கணையா?**

‘அல்லாந்து’ என்பதற்கு ‘அலமந்து’ (சீவக.2963) என்று உரைவகுத்த நச்சினார்க்கினியரே ஈண்டு உரைவளஞ் சிறப்ப எதிர்மறையிலக்க ணையாய் ‘மகிழ்ந்து’ என்று அச்சொற்கு உரைவகுத்தனர் எனல் இழுக்காகாது. இலக்கணை-ஒருசொல் உரிய பொருளை விட்டு அப்பொருளுக்கு இனமான பொருளை உணர்த்துவது. எடுத்துக்காட்டாக, அழுக்கு, அறு என்னும் இரண்டு சொற்கள் சேர்ந்து ஒருசொல் தன்மைப்பட்டு, எதிர் மறையிலக் கணையால் குற்றத்தை நீக்கு என்னும் பொருளைத் தராமல் குற்றத்தை யுடைய வனாகு எனப் பொருள்பட்டு, பொறாமை யைக் குறித்தல் காண்க.” என வலிந்து பொருள் கொள்கிறார் செகந்நாதா சாரியார். இக்கருத்தும் ஏற்புடையதாக இல்லை. எப்படி யெனின், எதிர்மறை இலக்கணைக்கு அவர் கூறும் சான்றில், ‘அழுக்கு, அறு’ என்னும் இரண்டு சொற்கள் உள்ளன. ஆனால், ‘அல்லாந்து’ என்பதோ ஒருசொல். இதனை, “அல்லாப்பர், செம்மாப்பர் என்பன போலச் ‘சோகாப்பர்’ என்பது ஒருசொல்.” என்ற பரிமேலழகரின் குறளுரை கொண்டு அறிய முடிகிறது.

**'அல்லாந்து'** என்பதனை அல்+ஆ+த்(ந்)+த்+உ என்றே பிரிக்கலாம். இதில் 'அல்' என்பதே பகுதி. 'அல்' என்பது எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றின் முதனிலை ஆகும். 'அல்' பெயரெச்சமாகவும், பல்வேறு ஈறுகளாகவும், இடைநிலையாகவும் வரும்.

சான்று

**அல்லா விழுந்தாளை எய்தி எழுந்து ஏற்று யான்** *(பரி. பா.6:89)*

**அல்லா நெஞ்ச முறப்பூட்டக் காய்ந்தே** *(பரி. பா.6:99)*

எனவரும் பரிபாடல் பாடலடிகளில் 'அல்லா' என்பதற்குப் பரிமேலழகர் முறையே, "அல்லாந்து விழுந்தாளை", 'அல்லாப்பை இறுகப்பூட்டுதலால்'" என்று உரையியற்றியி ருப்பது இங்கு எண்ணத்தக்கது. மேலும்,

"ஆக்க மிழந்தேமென்று அல்லாவார்" என்ற 593ஆவது குறளின் உரையில், 'அல்லாவார்' என்பதற்கு 'அலமரார்' என்றே பரிமேலழகர் உரைவகுத்திருப்பதும் மற்றோர் சான்றா கிறது. எனவே 'அல்லாந்து' என்பது எதிர்மறை இலக்கணையாய் 'மகிழ்ந்து' எனப் பொருள் தரும் என்னும் கருத்து ஏற்புடையதாக இல்லை எனலாம்.

**அல்லாந்து - மகிழ்வாகாது என்பதற்குக் கூறும் காரணங்கள்**

- **அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி** (தொல். சொல். மர. நூ.13) என்னும் தொல்காப்பியரின் இலக்கண விதிப்படி பார்த்தாலும், 'அல்லாந்து' என்பதற்கு 'மகிழ்தல்' என்னும் பொருள் பொருந்து வதாக இல்லை.
- **"அலமரல், தெருமரல், உழலுதல் என்னுஞ் சொற்கள் குற்றவாளிகளைச் சக்கரத்திலிட் டுச் சுழற்றிக் கொன்றமையைத் தெரிவிக் கும்"** என்ற தேவநேயப் பாவாணரின் சொல்லாராய்ச்சிக் கருத்துப்படி பார்ப்பி னும், 'அல்லாந்து' என்பதற்கு 'வருந்தி' என்பதே பொருத்தமுடைய பொருள் என்பது புலனாகும்.
- சங்க இலக்கியம் மற்றும் பிற இலக்கியங்களில் எந்தவொரு இடத்திலும் 'அல்லாந்து' – 'அலமந்து' – 'அலமரல்' ஆகிய சொற்களுக்கு 'மகிழ்தல்", 'இன்பம்' எனப் பொருளுரைக்கப் படவில்லை. நச்சினார்க்கினியர், சி.செகந்நாதாசாரியார் இருவரின் குறிஞ்சிப்பாட்டு உரை இதற்கு விதிவிலக்கு.
- கழகத் தமிழ்க் கையகராதியும், தமிழ் இலெக்சிகனும் 'அல்லாத்தல்' என்பதற்கு 'மகிழ்ந்து' என்றும் பொருள் கூறியிருப்பி னும், தமிழ் இலெக்சிகனில் மட்டுமே 'மகிழ்ந்து' என்ற பொருளுக்கான இலக்கியச் சான்றுகாட்டப்பட்டுள்ளது. அதுவும் நச்சினார்க்கினியரின் குறிஞ்சிப்பாட்டு உரையை மையமிட்டு அமைந்திருப்பதும், அதனைத் தவிர்த்துப் பிற சான்றுகள் காட்டப்படவில்லை என்பதும் எண்ணத் தக்கதாகும்.
- அல்லாத்தல்=துன்பமுறுதல், அல்லாட்டம் =அலைந்து திரிதல், அல்லாப்பு = துன்ப முறுதல், வருத்தம், அல்லாமை =தீக்குணம் ஆகிய சொற்களுணர்த்தும் பொருள்களும் மகிழ்வினைக் குறிப்பதாக இல்லை. 'அல்லாந்து' என்ற பழஞ்சொல் அதே வடிவத்தில் இப்போது வழங்கப் பெற வில்லையென்றாலும், துன்பமுறுதலைக் குறிக்க 'அல்லாடுதல்' என்னும் சொல் இன்றும் புழக்கத்திலுள்ளது. (எ.டு. வறுமை யில் அல்லாடுகிறான்)

**மேற்கூறியவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது.....**

**'அல்லாந்து'** என்பதற்குப் பொ.வே.சோ. கூறிய **'வருந்தி'** என்ற பொருளே பொருத்த முடைய பொருள் என்பதும், குறிஞ்சிப் பாட்டின் 142-143ஆம் அடிகளுக்கு 'மாட்டு' இலக்கணத்தின் அடிப்படையில் நச்சினார்க் கினியர் கண்ட பொருளும், அதனை அப்படியே வழிமொழியும் சி.செகந்நாதா சாரி யாரின் கருத்தும் ஏற்புடையன அல்ல என்பதும் தெளிவாகிறது.